மன்னார்குடி வட்டாரம், அசேஷம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை திரு கு.ரவி

ந.க.எண் : 02/2024/அ.ஊ.ம.அ நாள் : 20.03.2024

பொருள் :	மனைப்பிரிவு - திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி வட்டாரம் - அசேஷம் ஊராட்சி மற்றும் கிராமம் புல எண்கள் 161/5A2, 161/6B, 161/7A1B, 161/7A2 ஆகியவற்றில் 2374 ச.மீ பரப்பளவில் அமையப்பெற்று திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ள "SP நகர்" மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் சார்பாக
பார்வை	1. G.O.NO:18, Department of Municipal Administration Dated : 31.01.2020 2. G.O.NO:141, Housing and Urban Development Department Dated :23.09.2020 3. G.O.NO:181, Housing and Urban Development Department Dated :09.12.2020 4. திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடித எண் : ROC No : **ROC No. 12965/2023/TVR Dated 02.12.2023/2023/TCP** 5. ஊராட்சி மன்றத்தலைவர் - அவர்களுக்கு இனாம் சாசனம் செய்யப்பட்ட ஆவண எண் : 5404/2023 நாள் : 16.10.2023 6. அரசு கணக்கு தலைப்பில் கருவூலத்தில் செலுத்தப்பட்ட செலுத்து சீட்டு நாள் : 15.03.2024 7. ஊராட்சி மன்ற அலுவலக கணக்கில் செலுத்தப்பட்ட செலுத்து சீட்டு நாள் : 15.03.2024 8. திரு. ப.சண்முகசுந்தரம் த\பெ பரமசிவம் அவர்களின் விண்ணப்பம் நாள் : 05.03.2024 9. தொடர்புடைய ஆவணங்கள்

உத்தரவு :

பார்வை 1 முதல் 3 வரையிலான அரசாணைகளின்படியும், பார்வை 4ல் காணும் செயல்முறைகளின்படியும், மன்னார்குடி வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் கிராமம் புல எண்கள் 161/5A2, 161/6B, 161/7A1B, 161/7A2 ஆகியவற்றில் 2374 ச.மீ பரப்பளவில் அமையப்பெற்ற "SP நகர்" எனப்பெயரிடப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு திருவாரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் ம.வ/மா.ந.ஊ.அ (TVR) எண் : 52/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவின் சாலை, பொது ஸ்தலம், மின்சார வாரிய ஸ்தலம், மூலை முடுக்கு ஆகிய இனங்கள் அசேஷம் உள்ளாட்சியால் பார்வை 02ல் கண்டுள்ளப்படி பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தான இனங்கள் அனைத்தும் அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் மற்றும் செலுத்த வேண்டிய கட்டண இனங்கள் உரிய அரசு தலைப்பில் செலுத்தியதன் அடிப்படையிலும் இணைப்பில் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு புதிதாக அமைக்கப்படும் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் 53/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்பதல் வழங்கப்பட்டுள்ள வரைப்படத்தின்படி எல்லைக்கற்கள் வரையறுக்கப்பட வேண்டும்.
2. மனைப்பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட ஊராட்சிகள் சட்டம் பிரிவு 175 முதல் 179 வரையிலான பிரிவுகளின்படியும் 200(B) பிரிவுகளின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப சரளை கற்களை கொண்டு அமைக்கப்பட வேண்டும்.
3. குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான பாலங்கள், கழிவு நீர் வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு, ஆகிய வசதிகளை அமைத்து தர வேண்டும்.
4. நகர ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக சாலையின் அளவுகள், சாலையின் அமைப்புகள், மற்றும் பொது ஒதுக்கீட்டின் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் கூடாது.
5. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மூலை முடுக்குகளில் கட்டிடம் ஏதும் கட்டுதல் கூடாது.
6. இம்மனைப்பிரிவில் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்
7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதிகளை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்
8. மனையின் ஊடே குறைந்த மின் அழுத்த மற்றும் உயர் மின் அழுத்த மின்கம்பி பாதை / தொலைபேசி கம்பி பாதை அமைந்தால் கம்பி

பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தில் காண்பித்துள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவு அமையும் இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் அங்கீகார எண் குறிப்பீட்டு விளம்பரம் செய்யப்பட வேண்டும்.
10. இம்மனைப்பிரிவு அமையும் நிலமானது தமிழ்நாடு நில சீர்திருத்தச்சட்டத்தின் படி எந்த நடவடிக்கைக்கும் உட்பட்டு இருக்கக்கூடாது.
11. இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

ஊராட்சி மன்ற தலைவர்3

அசேஷம்

பெறுதல் :

திரு.ப.சண்முகசுந்தரம்
த/பெ. பரமசிவம்
கீழ மொட்டை ரோடு
மன்னார்குடி
தஞ்சாவூர் தாலுக்கா

நகல் :

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மன்னார்குடி வட்டாரம்,
3. சார் பதிவாளர், மன்னார்குடி
4. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவாரூர். அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மன்னார்குடி